# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1799/2 - 2013 පෙබරවාරි මස 26 වැනි අඟහරුවාදා - 2013.02.26

*1799/2 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

LA/ *1576*

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*64 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 64 (1) ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்ர ரூபசிங்ஹ குணவர்தன ஆகிய நான், மாத்தறை பிரதேச சபையின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற நீர் விநியோக நடவடிக்கை தொடர்பாக அச்சட்டத்தின் 63 (1) ஆம் பிரிவின் கீழ் என்னால் அனுமதியளிக்கப்பட்ட தன்னார்வ பரிமாற்ற திட்டத்தின் ஏற்பாடுகளை இக்கட்டளையின் மூலம் கீழ் காணப்படும் அட்டவணைக்கு உட்படுத்துகின்றேன்.*

*தினேஷ் சந்ர ரூபசிங்ஹ குணவர்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35 புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2013, சனவரி 17.*

***அட்டவணை***

*61 (1) ஆவது பிரிவு – தன்னார்வ பரிமாற்ற திட்டத்தில் உள்ளடங்கும் விடயங்கள்.*

*(அ)* *கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகல அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களையும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளித்து சபைக்குச் சொந்தமாக்குதல் வேண்டும். அதாவது:-*

*(1)* *1 ஆவது அட்டவணையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள மாத்தறை பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள நீர் பகிர்ந்தளிப்பு வலையமைப்பினை செயற்படுத்துவதற்கு மற்றும் பராமரிப்பதற்கு தேவையான நீர்க் குழாய் வழிகளின் வழியுரிமைகள், உதிரிப்பாகங்கள், துணை உபகரணங்கள் மற்றும் பண்டகசாலைப் பொருட்களுடன் அனைத்து பிரதான நீர்க் குழாயினை பகிர்ந்தளிக்கும் நீர்க்குழாய் வழிகள்.*

*(ஆ)* *மேற்கூறப்பட்ட சொத்து குறித்து திட்டமிடுதல், பொருத்துதல், நிர்மாணித்தல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் சம்பந்தமாக மாத்தறை பிரதேச சபை பிணைப்புற்றுள்ள ஒப்பந்தங்கள், சபையின் உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் அனைத்தும் சபையிடம் கையளிக்கப்படும் ;*

(இ) நீரைப் பாவித்தல் மற்றும் நீர் சேவையினை வழங்குதல் தொடர்பாக நீர்ப் பாவனையாளர்களுடன் மாத்தறை பிரதேச சபை பிணைப்புற்றுள்ள சகல ஒப்பந்தங்களும், அந்த சேவையினை பெற்றுக்கொள்வது தொடர்பாக செலுத்த வேண்டியுள்ள கொடுப்பனவுகளும் சபையிடம் கையளிக்கப்படும் ;

(ஈ) 8,313,442 ரூபா மதிப்புடைய பெறுமதிமிக்க இச்சொத்துகள் அரசாங்கத்தின் மூலம் நிதி உதவியடிப்படையில் சபைக்கு கையளிக்கப்படும் ;

(உ) நீர் விநியோகம் சம்பந்தமாக நகர சபை ஏற்கனவே செய்து கொண்டுள்ள சகல ஒப்பந்தங்களும் சபையினால் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், ஒப்பந்தங்களை நிறைவடையச் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

மேற்குறித்த விடயமானது இவ் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் அமுலுக்குவரும்.

**1 ஆவது அட்டவணை**

| அமைவிடம் | விபரம் | கொள்ளளவு/அளவு |
|---|---|---|
| 1. மாத்தளை பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள நீர் விநியோகத் திட்டத்திற்குரிய அனைத்து நீர்க் குழாய்களும். | நீர்க் குழாய் வலையமைப்பிற்கு சொந்தமான சகல நீர்க் குழாய்கள், துணை கருவிகள் மற்றும் உபகரணங்கள். | மற்றும் மீண்டும் பொருத்துவதற்கு தேவையான வழியுரிமையுடனான நீர்க் குழாய் பராமரிப்பு . |

3- 563

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.